**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 36/2021 |
| Name | : Ilavarasan |
| P.W. | : 1 |
| Father Name | : Selvan |
| Village | : Devathur |
| Taluk | : Ottanchattiram, Dindigul |
| Caste | : |
| Calling | : Mason |
| Religion | : |
| Age | : 23/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15 .02.2022

நான் ஒட்டன்சத்திரம் தேவத்தூரில் குடியிருந்து மேசன் வேலை செய்து வருகிறேன். 22.03.2021 அன்று இரவு நான் வேலைக்கு சென்று கொண்டு இரவு 09.45 மணிக்கு எனது பைக்கில் நானும், எனது தம்பியும் தனித்தனியாக பைக்கில் கண்ணாடிப்புத்தூர் சர்ச்சுக்கு முன்னாடி எனது தம்பியின் பைக்கை குறுக்காட்டிய ஆஜர் எதிரிகளில் 3 பேரான 1, 2, 4 ம் எதிரிகள் எனது தம்பியை குறுக்காட்டி திருட வந்தீர்களா என்று கேட்டார்கள் நான் சென்று கேட்ட போது அப்போது 1 மற்றும் 2 எதிரிகள் கையால் எனது உடல் முழுவதும் அடித்தார்கள். மீண்டும் 3, 4 எதிரிகள் சில்வர் போசி, பிளாஸ்டிக் (Chair)சேரால் என்னை அடித்தார்கள். அவர்கள் அடித்ததில் எனக்கு இடது பக்க

மண்டையில் வெட்டிவிட்டது. என்னை முதுகில் சேரால் அடித்தார்கள். எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. நான் கீழே விழுந்து விட்டேன். பின்னர் ஆம்புலன்சில் என்னை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அடித்துவிட்டு என்னை தகாத வார்த்தையால் 3, 4 எதிரிகள் எனது தாயை கெட்டவார்த்தையால் திட்டினார்கள். என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். என் மீது 3ம் எதிரி கல் எறிந்தார். நான் மருத்துவமனையில் இருந்த போது என்னை போலீசார் விசாரித்தார்கள்.என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது அ.சா.ஆ. 1 ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கல் தான் என் மீது எறிந்த கல் தான். அது அரசு சான்று பொருள் 1 ஆகும். என்னிடம் காட்டப்படும் சில்வர் போசி அரசு சான்று பொருள் 2 ஆகும். என்னிடம் காட்டப்படும் உடைந்த நிலையில் உள்ள பிளாஸ்டிக் சேர் (Chair) அரசு சான்று பொருள் 3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.